www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுப் பொதுத்தேர்வு - 2023

**R** Reg.No. 1 0 3 1 6

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

குறிப்பு :விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

15 x 1 = 15

1. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழகனார் குறிப்பிடுவது
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும், பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை - என்று இவ்வடிகள் குறிப்பிடுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
3. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
4. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
5. "பெரிய மீசை சிரித்தார்" - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
6. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
7. கோசல நாட்டின் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
8. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ________.
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
9. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" - இத்தொடர் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே ________.
   அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
   இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்
10. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" - என்னும் அடியில் பாக்கம் என்பது ________.
    அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
11. அருந்துணை என்பதைப் பிரித்தால் ________.
    அ) அருமை + துணை ஆ) அரு + துணை
    இ) அருமை + இணை ஈ) அரு + இணை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



*பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க.*

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே -

12. *இப்பாடல் எந்த நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?*
அ) தேவாரம் ஆ) திருவாசகம் இ) நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ஈ) திருப்புகழ்
13. இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) இறைவன் ஆ) குலசேகராழ்வார் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
14. மாளாத - பொருள்தருக.
அ) தீராத ஆ) மாய்ந்த இ) மாயம் ஈ) நோய்
15. இப்பாடலில் மருத்துவன் என்பது யாரைக் குறிக்கும்?
அ) இறைவன் ஆ) குலசேகராழ்வார் இ) பல்லவன் ஈ) பாண்டியன்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

**21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. வசனக் கவிதை என்பது யாது?
17. *விடைகளுக்கேற்ற வினா க்கள் அமைக்க.*
அ) விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.
ஆ) பாரதியார் சிந்துக்குத் தந்தை எனப் போற்றப்படுகிறார்.
18. "இறழப் பொம்மல் பெறுகுவிர்" - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
19. செய்குதம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
20. கம்பராமாயணம் - குறிப்பு வரைக.
21. "விடல்" - என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்துக.
23. கிளர்ந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. *பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறியிடுக.*
முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை மோப்பக் குழையும் அனிச்சம் என்ற குறளில் எடுத்துரைக்கின்றார் வள்ளுவர்
26. *கலைச்சொற்களைத் தமிழாக்கம் தருக :*
அ) Folk Literature ஆ) Conversation
27. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
28. *பழமொழிகளை நிறைவு செய்க :*
அ) உப்பிட்டவரை ________. ஆ) விருந்தும் மருந்தும் ________.

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 =**

29. கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு
- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



30. *உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - என்று பாரதி கூறுவதை தமிழகம் செயல்படுத்த வேண்டும். மொழிபெயர்ப்பு எல்லா காலகட்டங்களிலும் தேவை.

அ) மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

ஆ) மொழிபெயர்ப்பு பற்றி பாரதி கூறுவது யாது?

இ) மொழிபெயர்ப்பு எந்த காலகட்டத்திற்கு தேவை?

31. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

**34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்குப் பொருந்துவதை குறள்வழி விளக்குக.

34. *அடி மாறாமல் எழுதுக* :

அ) தண்டலை மயில்களாட ......... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

*(அல்லது)*

ஆ) சிறுதாம்பு தொடுத்த ........... எனத்தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

36. தற்குறிப்பேற்ற அணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி எழுதுக.

பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 x 5 = 25**

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தை யும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

*(அல்லது)*

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*


ஆ) **பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / கவிதை நூலுக்கான** மதிப்புரை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



41. எண் 10, கம்பர் தெரு, விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊரில் வசிக்கும் எழிலன் மகள் நிறைமதி என்பவள் மயிலம் கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு சென்றுள்ளார். தேர்வர் தன்னை நிறைமதியாகப் பாவித்து கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. புயலின் போது செயல்படுத்த வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலவற்றுள் ஐந்தினை எழுதுக. *(அல்லது)*

*மொழிபெயர்க்க :*

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

www.Padasalai.Net

## பகுதி - V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 =24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கவிதையின் வாயிலாக விளக்குக.

*(அல்லது)*

ஆ) "அறிவியலார் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" - என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றை எழுதுக.

45. அ) அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" - முன்னுரை - இளமையும் கல்வியும் - முதல் விண்வெளிப் பயணம் - இறுதிப்பயணம் - விருதுகளும் அங்கீகாரங்களும் - முடிவுரை மேற்கூறிய கருத்தைக் கொண்டு கட்டுரை எழுதுக.

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com